# தமிழ்மொழி மூல க.பொ.த உயர்தர மாணவர்களின் கணித பாடக் கற்கைகளுக்கான வளங்களை மேம்படுத்துதல்

**அ. ஹரிசன்[1†], அ. சம்பந்தன்[2]**

[1]கணினி விஞ்ஞான பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
[2]கணினி விஞ்ஞான பீடம், போட்ஸ்மோர்த் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்
[†]mathswin@gmail.com

**சுருக்கம்:** வரையறுக்கப்பட்ட வளங்களினூடு போட்டித் தன்மையுடன் கற்று, பல்கலைக்கழக அனுமதியைப் பெறமுயலும் மாணவர் சமூகத்திற்கும், மிகக் குறுகிய வளங்களுடன் அவர்களுக்குக் கற்பிக்க முனையும் ஆசிரியர் சமூகத்திற்கும் இடையிலான ஒரு சமநிலையைப் பேணுவது அவசியமாகின்றது. க.பொ.த உயர்தர வகுப்பில் கணிதபாடம் கற்கும் மாணவர்களுகான வளங்கள் பற்றியும் அக் கணித பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பயன்படுத்தும் வளங்கள் பற்றியும் அறிந்து கொள்வதும், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையே சமநிலையைப் பேணுவதற்கான வழிமுறையை கண்டறிந்து கொள்வதும் இந்த ஆய்வின் குறிக்கோள்களாகும். இலங்கையின் போர்க்காலத்திற்கு முன்னரும், போர்க்காலத்திலும், போர் முடிவடைந்த பின்னரும் இன்று வரையான காலப்பகுதியிலும் க.பொ.த உயர்தர மாணவர்களின் கணித பாடக் கற்கைகளுக்கான வளங்கள் எவையென்பது பற்றியும் அவை எவ்வாறு பயன்படுத்தப்பட்டன, எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன மற்றும் எவ்வாறு மேம்படுத்தப்படலாம் என்பது பற்றியும் இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது. அத்தோடு, தமிழ்மொழி மூல க.பொ.த உயர்தர மாணவர்களின் கணிதபாடக் கற்கைகளுக்கான வளங்களை மேம்படுத்துவதன் மூலம், போட்டித்தன்மையுடன் கற்கும் மாணவ சமூகத்திற்கும் குறைந்த வசதிகளுடன் கற்பிக்கும் ஆசிரிய சமூகத்திற்குமிடையே சமநிலை எய்தப்படலாம் என்பதையும் இந்த ஆய்வுக்கட்டுரை சுட்டி நிற்கின்றது. எதிர்கால மாணவ சமூகத்திற்கான ஆக்கபூர்வமான பங்களிப்புகளை வழங்கக்கூடிய திட்டங்கள் பற்றியும் அவை எவ்வாறு செயற்படுத்தப்படலாம் என்பது பற்றியும் இக்கட்டுரை விளக்குகின்றது.